# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No. 70/2024

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-1<br>Defence<br>Court |
| Name | : | சேகர் |
| Father's Name | : | நாராயணசாமி |
| Village | : | வெங்கமேடு |
| Taluk | : | கொடுமுடி |
| District | : | ஈரோடு |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 10.06.2026

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது க.பரமத்தி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் வேலாயும்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 29.07.2020ம் தேதி காலையில் நானும், த.கா. கண்ணன் , ஆய்வாளர் ஜெயராமன் என்பவருடன் ரோந்து அலுவலாக வேலாயுதம்பாளையம், மலைவீதி, பாலத்துறை, பைபாஸ் 4 ரோடு, புகளூர் 4 ரோடு, செம்படாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது தகவலாளி மூலம் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 05.30 மணிக்கு தோட்டக்குறிச்சி காவிரி ஆற்றுப்படுகை சென்று கண்காணித்த போது அந்த

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

வழியாக வந்த இரண்டு இரட்டை மாட்டு வண்டியிலிருந்து சுமார் தலா 1/4 (0.20) யூனிட் ஆற்று மணலுடன் வந்தாவர்கள் எங்களை கண்டதும் வண்டியிலிருந்து இறங்கி தப்பித்து ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து அவர்கள் பெயர் முரளி மற்றும் செல்வம் என்று கூறினார்கள்.

2) மணல் அள்ளுவதற்கு எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தோட்டக்குறிச்சி காவேரி ஆற்றிலிருந்து சுமார் 1/2 (0.40) யூனிட் மணலை திருடி எதிரிகளுக்கு சொந்தமான இரண்டு மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு வருவதாக கூறினார்கள். எதிரிகளை காலை 5.30 மணிக்கு கைது செய்தும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஊரடங்கு அமலில் இருந்து வருவதால் சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் நானும், கண்ணன் என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் இட்டோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.சாஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் 8.30 மணிக்கு நிலையம் வந்து ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மணலுடன் கூடிய மாட்டு வண்டியை தான் ஆய்வாளர் கைப்பற்றியதாகும். **அந்த புகைப்படம் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நாங்கள் எந்த வண்டியில் ரோந்து சென்றோம் என்றால் நானும் கண்ணனும் தனி வாகனத்திலும் உதவி ஆய்வாளர் தனி வாகனத்திலும் சென்றோம். பொதுவாக ரோந்து செல்லும போது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான் அதை உதவி ஆய்வாளர் விசாரணை செய்யும் போது ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடம் செல்லவி'லை என்றாலும், உதவி ஆய்வாளர் புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No. 70/2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-2<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | கருணாநிதி |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | காந்திகிராமம் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 10.06.2026

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேலாயும்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஆய்வாளர் ஜெயராமன் என்பவரின் கையெழுத்து எனக்கு பரிச்சயமானது. ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.07.2020ம் தேதி காலையில் , த.கா. கண்ணன், சேகர், ஆய்வாளர் ஜெயராமன் என்பவருடன் ரோந்து அலுவலாக வேலாயுதம்பாளையம், மலைவீதி, பாலத்துறை, பைபாஸ் 4 ரோடு, புகளூர் 4 ரோடு,

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

செம்படாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது தகவலாளி மூலம் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 05.30 மணிக்கு தோட்டக்குறிச்சி காவிரி ஆற்றுப்படுகை சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த இரண்டு இரட்டை மாட்டு வண்டியிலிருந்து சுமார் தலா 1/4 (0.20) யூனிட் ஆற்று மணலுடன் வந்தாவர்கள் போலீசாரை கண்டதும் வண்டியிலிருந்து இறங்கி தப்பித்து ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து அவர்கள் பெயர் முரளி மற்றும் செல்வம் என்று கூறினார்கள்.

2) மணல் அள்ளுவதற்கு எவ்வித ஆவணங்களும் உரிமமும் இல்லாமல் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் தோட்டக்குறிச்சி காவேரி ஆற்றிலிருந்து சுமார் 1/2 (0.40) யூனிட் மணலை திருடி எதிரிகளுக்கு சொந்தமான இரண்டு மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு வருவதாக கூறினார்கள். எதிரிகளை காலை 5.30 மணிக்கு கைது செய்தும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஊரடங்கு அமலில் இருந்து வருவதால் சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் சேகர், கண்ணன் என்பவர்களும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள்.

3) பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் 8.30 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண். 486/2020, ச.பி.379 இ.த.ச r/w 21(1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வையிடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** தொடர்ந்து சாட்சிகளான சேகர், கண்ணன், அய்யப்பன், மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பொதுப்பணிதுறையிடம் மணலை ஒப்படைத்து பொதுப்பணிதுறை ஆற்று பாதுகாப்பு பிரிவு மற்றும் கனிமம் கண்காணிப்பு பிரிவில் உதவி பொறியாளராக பணிபுரிந்த சுகுமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த ரசீது அ.சா–ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**5)** இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இ.த.ச r/w 21(1) MMDR Act விலிருந்து ச/பி. 379 இதசவாக மாற்றும் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ– 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் ஆய்வாளர் விசாரணையை முடித்து வழக்கு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரம், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக எவ்வித சான்றுப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**